அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 85/2017

தேதி : 06/09/2017

**பெண் பத்திரிக்கையாளர் சுட்டுக்கொலை**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர், திரு.ஆர்.சரத்குமார் கண்டனம்**

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் கௌரி லங்கேஷ் என்ற பெண் பத்திரிக்கையாளர் மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் மிகவும் அதிர்ச்சியை அளிப்பதாக உள்ளது. பத்திரிக்கையாளர்களுடைய சுதந்திரத்தில் எந்தவித தலையீடும் இருக்ககூடாது என்பதை நான் தொடர்ந்து வலியுறுத்திவருகிறேன். அதே வேளை பத்திரிக்கையாளர்கள் கூறும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளவேண்டிய பக்குவம் அனைவருக்கும் தேவை. ஒரு தவறான விமர்சனம் வைக்கப்படுகிறது என்றால் அதை சட்டரீதியாக சந்தித்து விளக்கம் பெற வேண்டும் என்பதுதான் நியதி. அதை விடுத்து பழிவாங்கும் நோக்கத்தில் பத்திரிக்கையாளர்களை தாக்குவது என்பது அநீதி என்றே கருதுகிறேன். அந்த வகையில் மர்ம நபர்களால் துப்பாக்கி சூட்டிற்கு பலியான கௌரி லங்கேஷ் அவர்கள் மீதான தாக்குதலை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன். கர்நாடக அரசு தகுந்த விசாரணையின் மூலம் குற்றவாளிகளை கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மறைந்த கௌரி லங்கேஷ் அவருடைய குடும்பத்தாருக்கும், நண்பருக்கும், பத்திரிகை சகோதரர்களுக்கும் நானும் ஒரு பத்திரிக்கையாளர் என்ற முறையில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in
Mail: samathuvam2007@gmail.com